**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 129** **நாள்: 11.09.2016**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொரட்டூர் பகுதிகளில் “ஸ்கைரோனமஸ் பூச்சி” தொல்லையை ஒழிக்க நடவடிக்கை ! மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களின் தலைமையில் ஆய்வு !!

********

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று **(11.09.2016)** காலை சுமார் **10.30** மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்களின் தலைமையில் கொரட்டூர் ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் ‘‘ஸ்கைரோனமஸ் பூச்சி’’களை போர்க்கால அடிப்படையில் ஒழிப்பதற்காக இன்று **(11.09.2016)** கொரட்டூர் சீனிவாசபுரத்தில் மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்டார்.

கொரட்டூர் ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் ஸ்கைரோனமஸ் பூச்சியின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டு அவை வளர்ந்து பெருகாவண்ணம் என்னென்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி ஆராயப்பட்டது. இப்பகுதியில், உடனடியாக கிரிமிநாசினி மருந்துகள் அடிக்கும் பணி தொடங்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பூச்சியியல் வல்லுநர்கள் இப்பூச்சிகள் எப்படி உருவாகின்றன என்பது குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

இப்பகுதியில் வாழும் பொதுமக்களிடம் குறைகள் கேட்டறியப்பட்டது. இரவுநேரங்களில் இந்த பூச்சிகளின் தொல்லைகள் அதிகம் இருப்பதாக தெரிவித்தனர். எனவே, இரவுநேரங்களில் கிருமிநாசினிகளை தெளித்து பூச்சிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், குளக்கரைகளிலும் அதன் ஓரங்களிலும் அதிகத்திறன் கொண்ட வெளிச்சம் தரும் விளக்குகளை இரவு நேரங்களில் அமைத்தால், அந்த வெளிச்சத்தினால் பூச்சிகள் கவரப்பட்டு, பொதுமக்கள் வாழும் பகுதிகளில் இருந்து வெளியேற வாய்ப்புகள் இருப்பதால், இதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு செய்வதால் ஏரிப்பகுதியில் இருக்கும் பூச்சிகள் குடியிருப்புகளுக்குள் வருவது பெருமளவில் தடுக்கப்படும். இந்த பூச்சிகளின்

தொல்லையில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு இப்பூச்சிகளை முற்றிலும் ஒழிக்க அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின்போது, துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப., அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸாண்டர், பொதுசுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர்.கே.கொழந்தைசாமி, மாநகர நல அலுவலர், அரசு பொதுசுகாதாரத்துறை அலுவலர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை அலுவலர்கள், பூச்சியியல் வல்லுநர்கள் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**